KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.16

ARTICLES

பதிற்றுப்பத்தில் கொடைச் சிறப்பு

The Generosity in Patirruppattu

முனைவர் இரா. உஷாராணி[1,*] iD

[1] உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5.

***Corresponding author:** முனைவர் இரா. உஷாராணி, vmaxveera@gmail.com

ORCID iD: முனைவர் இரா. உஷாராணி https://orcid.org/0000-0002-8964-0535

ARTICLE INFO

Article history
Received: 10 October 2026
Revised: 12 October 2026
Accepted: 28 October 2026

Article ID
KIJTS-2026-0011

Peer review
Double-blind peer review

Keywords
Pathitruppattu
Generosity
Munificence
Parisilars
Pāṇars
Supplicants
Chera Kings
Sangam Age.

ABSTRACT

Sangam literature serves as one of the primary literary sources for understanding the social, economic, political, cultural, and everyday life aspects of the ancient Tamils. Pathitruppattu, one of the Eight Anthologies (Eṭṭuttokai), is a significant Puram-oriented work that records the administrative excellence, martial prowess, territorial prosperity, political governance, and poet–king relationship of the Chera rulers. In particular, the generosity of the Chera kings is portrayed directly in several poems and is also presented in association with the life contexts of parisilars, pāṇars, supplicants, and performers.

In Pathitruppattu, generosity is not merely an act of giving material possessions. It encompasses various dimensions such as the kings' munificence, the practice of sharing food, caring for supplicants, honouring pāṇars, distributing wealth acquired through warfare, offering valuable gifts such as elephants and gold, and granting land and revenue. Poetic expressions such as "parisilar verukkai," "irappōrkku ītal taṇṭā," "pāṇar puravala," and "iṉiyavai periṉē taṉittaṉi nukarkēm" reveal the various dimensions of the Chera kings' concept of generosity.

This study examines the excellence of generosity portrayed in Patirṟuppattu under various aspects, including caring for supplicants, supporting pāṇars and parisilars, providing food, offering elephants and war gifts, presenting gold and ornaments, granting land and revenue, and the ethical principle of sharing and communal consumption.

How to cite this article: முனைவர் இரா. உஷாராணி (2026). பதிற்றுப்பத்தில் கொடைச் சிறப்பு. *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 177–187. https://doi.org/10.63300/kijts603112026.16
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு மற்றும் வாழ்வியல் கூறுகளை அறிந்துகொள்வதற்கான முதன்மையான இலக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக விளங்குகின்றன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, சேர மன்னர்களின் ஆட்சிச்சிறப்பு, போர்த்திறன், நாட்டுவளம்,

அரசியல் மேலாண்மை, புலவர்–மன்னர் உறவு ஆகியவற்றைப் பதிவு செய்யும் புறப்பொருள் சார்ந்த சிறப்புமிக்க நூலாகும். குறிப்பாக, சேர மன்னர்களின் கொடைச்சிறப்பு பல பாடல்களில் நேரடியாகவும், பரிசிலர், பாணர், இரவலர், கூத்தர் முதலானோரின் வாழ்வியல் பின்னணியோடும் இணைந்தும் எடுத்துரைக்கப்படுகிறது.

பதிற்றுப்பத்தில் கொடை என்பது வெறும் பொருளை வழங்கும் செயலாக மட்டும் அமையவில்லை. அது மன்னனின் வள்ளன்மை, பகுத்துண்ணும் பண்பு, இரவலரைப் பேணுதல், பாணர்களைப் போற்றுதல், போரில் பெற்ற செல்வத்தைப் பகிர்தல், யானை மற்றும் பொன் போன்ற உயர்மதிப்புடைய பரிசுகளை வழங்குதல், நிலப்பகுதி மற்றும் வருவாயைக் கொடுத்தல் ஆகிய பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. “பரிசிலர் வெறுக்கை”, “இரப்போர்க்கு ஈதல் தண்டா”, “பாணர் புரவல”, “இனியவை பெறினே தனித்தனி நுகர்கேம்” போன்ற பாடலடிகள் சேர மன்னர்களின் கொடைச் சிந்தனையின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன. இவ்வாய்வு, பதிற்றுப்பத்தில் இடம்பெறும் கொடைச்சிறப்பை இரவலர் பேணல், பாணர்–பரிசிலர் பேணல், உணவு வழங்குதல், யானை மற்றும் போர்ப்பரிசில் வழங்குதல், பொன் மற்றும் அணிகலன் வழங்குதல், நிலம் மற்றும் வருவாய் வழங்குதல், பகுத்துண்ணும் அறச்சிந்தனை ஆகிய கூறுகளின் அடிப்படையில் ஆராய்கிறது.

குறியீட்டுச் சொற்கள்

பதிற்றுப்பத்து, கொடைச்சிறப்பு, வள்ளன்மை, பரிசிலர், பாணர், இரவலர், சேர மன்னர்கள், சங்ககாலம்.

முன்னுரை

மனித சமூகத்தின் வளர்ச்சியில் பொருளாதார வளமும் அதனைப் பகிர்ந்து கொள்ளும் பண்பும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. குறிப்பாகப் பழந்தமிழ்ச் சமூகத்தில் அரசனின் பெருமை அவனது போர்த்திறனால் மட்டுமன்றி, அவன் கொடைத்திறத்தாலும் மதிப்பிடப்பட்டது. அரசன் தன்னிடம் திரண்ட செல்வத்தைத் தனக்காக மட்டும் குவித்துக் கொள்ளாமல், புலவர்கள், பாணர்கள், இரவலர்கள், கலைஞர்கள் மற்றும் தன்னை நாடி வந்தோருக்குப் பகிர்ந்து வழங்கியமை சங்க இலக்கியங்களில் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டுள்ளது.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து சேர மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட நூலாகும். முதல் பத்தும் பத்தாம் பத்தும் கிடைக்காத நிலையில், எஞ்சிய எட்டுப் பத்துகள் எட்டு சேர மன்னர்களின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றன. இப்பத்துகளைப் பாடிய புலவர்களின் வாயிலாகச் சேர மன்னர்களின் அரசியல், போர், நாட்டுவளம், பண்பாடு, விருந்தோம்பல், கொடை ஆகியவை அறியப்படுகின்றன. பதிற்றுப்பத்தில் கொடைச்சிறப்பை நேரடியாகக் கூறும் பாடல்களும் உள்ளன. இரண்டாம் பத்தில் “கொடைச் சிறப்பு” எனப் பாடல் 18 அமைந்துள்ளது. நான்காம்

பத்தில் பாடல் 38 “பரிசிலர் வெறுக்கை” என்ற பெயரில் கொடைப் பெருமையை எடுத்துரைக்கிறது. ஏழாம் பத்தில் 61, 64, 66, 67 ஆகிய பாடல்கள் கொடைச்சிறப்பை வெவ்வேறு கோணங்களில் எடுத்துரைக்கின்றன. எட்டாம் பத்தில் 76ஆம் பாடல் “இரந்தோர் வாழ நல்கி / இரப்போர்க்கு ஈதல் தண்டா” என்று இரவலர்களுக்குக் குறைவின்றி வழங்கும் பண்பை வெளிப்படுத்துகிறது. எனவே, பதிற்றுப்பத்தில் இடம்பெறும் கொடைச்சிறப்பைத் தனித்த ஆய்வுப் பொருளாகக் கொண்டு ஆராய்வது பழந்தமிழரின் அரசியல் அறத்தையும் சமூகப் பொருளாதாரப் பண்பாட்டையும் புரிந்துகொள்ள உதவும்.

கொடைச்சிறப்பு

‘கொடை’ என்பது தன்னிடமுள்ள பொருளைத் தகுதியுடையோருக்கும் தேவையுடையோருக்கும் வழங்குதல் எனப் பொருள்படும். சங்ககால அரசியல் சிந்தனையில், அரசனுடைய செல்வம் அவனுடைய தனிப்பட்ட உடைமையாக மட்டுமல்லாமல், அவனை நாடி வரும் மக்களுக்கும் புலவர்களுக்கும் பயன்பட வேண்டிய பொதுவளமாகக் கருதப்பட்டதைக் காண முடிகிறது.

பதிற்றுப்பத்தில் நெடுஞ்சேரலாதனின் கொடைச்சிறப்பு

நெடுஞ்சேரலாதன் போர்த்திறம், ஆட்சித்திறம் ஆகியவற்றில் சிறந்து விளங்கியதோடு, தன்னை நாடி வந்தவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளல் தன்மையையும் பெற்றிருந்தான். அவனது அரண்மனை இரவலர்களுக்கும் புலவர்களுக்கும் எப்போதும் திறந்திருந்த கொடையிடமாகத் திகழ்ந்தது. தன்னைப் புகழ்ந்து பாடிய புலவர்களுக்கும், தன்னை நாடி வந்தோருக்கும் உணவு, பொருள் முதலியவற்றை அளவின்றி வழங்கிய அவனது கொடைப்பண்பு பதிற்றுப்பத்தில் சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, வந்தவர்களுக்கு உணவு வழங்குமாறு பணிப்பதும், தன் புகழ் உலகெங்கும் பரவ வேண்டும் என்ற அளவுக்கு வள்ளன்மையுடன் செயல்பட்டதும் அவனது கொடைச்சிறப்பை வெளிப்படுத்துகின்றன. இதனைப் பின்வரும் பதிற்றுப்பத்துப் பாடல் வரிகள் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

“உண்மின் கள்ளே! அடுமின் சோறே!

எறிகதிற்றி! ஏற்றுமின் புழுக்கே!

வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப,” (பதிற்றுப்பத்து 18:1–3)

இப்பாடல் வரிகள், நெடுஞ்சேரலாதன் தன்னை நாடி வருபவர்களை விருந்தோம்பலுடன் வரவேற்று, அவர்களுக்கு உணவும் கள்ளும் அளவின்றி வழங்கிய கொடைப்பண்பை வெளிப்படுத்துகின்றன. “வருநர்க்கு வரையாது” என்ற தொடர், அவனது கொடையில் எல்லையோ அளவோ இல்லை என்பதை உணர்த்துகிறது. இதனால் நெடுஞ்சேரலாதனின் கொடைச்சிறப்பு என்பது பொருளை வழங்குதல் மட்டுமல்லாமல், வருபவர்களை அன்புடன் ஏற்று உபசரித்த விருந்தோம்பல் பண்போடும் இணைந்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

இரவலரைப் பேணும் கொடை

பதிற்றுப்பத்தில் மன்னனின் கொடைச்சிறப்பின் முக்கியமான கூறாக இரவலரைப் பேணுதல் அமைகிறது. இரவலர் தம்மை நாடி வரும்போது அவர்களை வெறுமனே அனுப்பாமல், அவர்களின் தேவையை உணர்ந்து பொருள் வழங்குவது சிறந்த அரசனின் பண்பாகக் கருதப்படுகிறது. இதனைப் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பாடிய அரிசில்கிழார்,

“இரந்தோர் வாழ நல்கி, இரப்போர்க்கு

ஈதல் தண்டா மா சிதறு இருக்கை” (பதிற்றுப்பத்து 76:7–8)

என்று குறிப்பிடுகிறார். இவ்வடிகளில் “இரந்தோர் வாழ” என்பதும், “ஈதல் தண்டா” என்பதும் முக்கியமானவை. இரவலர்கள் வாழ்வதற்குத் தேவையானவற்றை வழங்குவதோடு, கொடுப்பதை நிறுத்தாத அரசனின் தொடர்ச்சியான வள்ளன்மை இங்கு சுட்டப்படுகிறது. இதனால் கொடை என்பது ஒரு தனிநிகழ்வு அல்ல; அரசனின் தொடர்ச்சியான அறச்செயலாக இருந்தது என்பதை அறியலாம்.

பாணர் மற்றும் பரிசிலரைப் பேணுதல்

சங்ககாலச் சமூகத்தில் பாணர், கூத்தர், பொருநர், விறலியர் போன்ற கலைஞர்களும் புலவர்களும் மன்னர்களை நாடிச் சென்று தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தினர். அவர்களைப் பேணுதல் அரசனின் கடமையாகக் கருதப்பட்டது.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார்,

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் கொடைச்சிறப்பை காப்பியாற்றுக் காப்பியனார் பல்வேறு பாடல் வரிகளின் வழியாக எடுத்துரைக்கிறார். நார்முடிச்சேரல் தன்னை நாடி வந்த பரிசிலர்களையும் பாணர்களையும் வெறுமனே வரவேற்பதோடு நின்றுவிடாமல், அவர்களின் தேவைகளை அறிந்து தாராளமாகப் பரிசில்கள் வழங்கிய வள்ளலாக விளங்கியதைப் புலவர் பதிவு செய்கிறார். குறிப்பாக, பரிசிலர்களின் வருகையால் மகிழ்ந்து, அவர்களுக்கு வேண்டியவற்றை அளவின்றி வழங்கும் மன்னனாக நார்முடிச்சேரல் விளங்கியமை அவரது கொடைச்சிறப்பின் தனித்தன்மையாகும். இதனை,

“பரிசிலர் வெறுக்கை! பாணர் நாள் அவை!

வாள்நுதல் கணவ! மள்ளர் ஏறே!” (பதிற்றுப்பத்து 38:9–10)

இப்பாடல் அடிகளில், நார்முடிச்சேரல் பரிசிலர்களுக்கு விரும்பிய பொருள்களை வழங்கும் வள்ளலாகவும், பாணர்களைப் பேணிப் போற்றும் புரவலனாகவும் சித்திரிக்கப்படுகிறார்.

இங்கு “பரிசிலர் வெறுக்கை” என்ற தொடர் மிகவும் சிறப்புடையது. பரிசிலர்களுக்கு வேண்டிய செல்வமாகவே மன்னன் விளங்குகிறான் என்ற கருத்து இதில் வெளிப்படுகிறது. மேலும், “பாணர் நாளவை” எனப் பாணர்களுக்கென அவையில் இடமளித்து அவர்களைப் போற்றிய பண்பும் புலப்படுகிறது.

பகுத்துண்ணும் கொடை

கொடை என்பது தன்னிடமுள்ள செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்வதையும் உள்ளடக்கியது. நார்முடிச்சேரலின் கொடைப்பண்பை எடுத்துரைக்கும் பாடல் இதனைத் தெளிவுபடுத்துகிறது:

“இனியவை பெறினே தனித்தனி நுகர்கேம்

தருகென விழையாத் தாவில் நெஞ்சத்துப்

பகுத்தூண் தொகுத்த ஆண்மை,

பிறர்க்கென வாழ்தி நீ ஆகன்மாறே.” (பதிற்றுப்பத்து 38:13–16)

இங்கு “பகுத்தூண்” என்பது பகிர்ந்து உண்ணும் பண்பைக் குறிக்கிறது. தன்னிடம் உள்ள இனிய பொருட்களைத் தனக்காக மட்டும் வைத்துக் கொள்ளாமல் பிறருடன் பகிர்ந்து கொள்வதே மன்னனின் உயர்ந்த பண்பாகக் காட்டப்படுகிறது.

இதனால் சங்ககாலக் கொடைச்சிந்தனையில் பகுத்துண்ணுதல் – பிறருக்காக வாழ்தல் – ஈகை ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய அறக்கருத்துகளாக இருந்தன என்பதை அறியலாம்.

உணவு வழங்கும் கொடை

கொடைச்சிறப்பின் மற்றொரு வடிவம் உணவு வழங்குதல் ஆகும். நெடுஞ்சேரலாதனைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்,

“உண்மின் கள்ளே! அடுமின் சோறே!

எறிகதிற்றி! ஏற்றுமின் புழுக்கே!

வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப” (பதிற்றுப்பத்து 18:1–3)

என்கிறார். இங்கு உணவு, கள், புழுக்கு போன்றவை வருவோருக்குக் குறைவின்றி வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இது மன்னனின் அரண்மனை அல்லது அவையை நாடி வரும் புலவர், பாணர், விறலியர் போன்றோருக்கு விருந்தோம்பல் வழங்கப்பட்டதை வெளிப்படுத்துகிறது.

மேலும்,

“பெற்றது உதவுமின், தப்பு இன்று, பின்னும்…” (பதிற்றுப்பத்து 18:7)

என்ற பாடலடியும் பெற்றதைத் தகுந்த முறையில் வழங்கும் மனப்பான்மையைச் சுட்டுகிறது.

போரில் பெற்ற செல்வத்தைப் பரிசாக வழங்குதல்

சங்ககால மன்னர்களின் கொடைச்சிறப்பு அவர்களுடைய போர்வெற்றியோடும் தொடர்புடையதாக இருந்தது. போரில் வென்று பெற்ற பொருட்கள், செல்வங்கள், யானைகள் முதலியவை பரிசிலர்களுக்கு வழங்கப்பட்டன.

செங்குட்டுவனைப் பற்றிய பாடல்

“அட்டு ஆனானே, குட்டுவன்; அடுதொறும்,

பெற்று ஆனாரே, பரிசிலர் களிறே” (பதிற்றுப்பத்து 47:1–2)

என்று கூறுகிறது. போரில் வெற்றி பெற்ற ஒவ்வொரு முறையும் பரிசிலர்கள் யானைகளைப் பெற்றதாக இப்பாடல் குறிப்பிடுகிறது. இதன் மூலம் போரில் கிடைத்த வெற்றிப் பொருட்கள் அரசனுடைய தனிச்செல்வமாக மட்டும் கருதப்படாமல், அவனைப் பாடிப் புகழும் பரிசிலர்களுக்கும் வழங்கப்பட்டன என்பதை அறியலாம்.

யானையைப் பரிசாக வழங்குதல்

யானை சங்ககால அரசியல் மற்றும் போரியல் சூழலில் உயர்ந்த மதிப்புடைய செல்வமாக இருந்தது. அத்தகைய யானைகளையே பரிசிலர்களுக்குக் கொடையாக வழங்கிய செய்தி பதிற்றுப்பத்தில் இடம்பெறுகிறது.

“தோட்டி தந்த தொடிமருப்பு யானை

செவ் உளைக் கலிமா, ஈகை வான் கழல்” (பதிற்றுப்பத்து 38:6–7)

என நார்முடிச்சேரலின் ஈகைச் சிறப்பு கூறப்படுகிறது. மேலும் செங்குட்டுவனைப் பற்றிய,

“அட்டு ஆனானே குட்டுவன்; அடுதொறும்

பெற்றானாரே பரிசிலர் களிறே” (பதிற்றுப்பத்து 47:1–2)

என்ற சான்று, யானை வழங்குதல் மன்னனின் சிறப்பான கொடை வடிவமாக இருந்ததை உறுதிப்படுத்துகிறது.

பொன் மற்றும் அணிகலன்களை வழங்குதல்

சங்ககாலத்தில் பொன் மற்றும் அணிகலன்கள் உயர்ந்த செல்வ அடையாளங்களாக விளங்கின. செல்வக்கடுங்கோ வாழியாதனின் கொடைச்சிறப்பைப் பாடிய கபிலர், கொடுமணம் மற்றும் பந்தர் போன்ற இடங்களுடன் தொடர்புடைய அரிய பொருட்களைச் சுட்டுகிறார்:

“கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு

பந்தர்ப் பெயரிய பேர் இசை மூதூர்,

கடன் அறி மரபின் கை வல் பாண!” (பதிற்றுப்பத்து 67:1–3)

அதே பாடலில்,

“தெண் கடல் முத்தமொடு நன் கலம் பெறுகுவை” (பதிற்றுப்பத்து 67:4)

என்று முத்து மற்றும் நற்கலன்கள் கிடைப்பதைக் குறிப்பிடுகிறது.

இதனுடன் பதிற்றுப்பத்து உரை மரபும் செல்வக்கடுங்கோ கொடுமணத்தில் கிடைத்த அணிகலன்களையும் பந்தரில் கிடைத்த முத்துகளையும் பரிசிலர்களுக்கு வழங்கியதாகக் குறிப்பிடுகிறது.

முத்து வழங்குதல்

பதிற்றுப்பத்தில் முத்து என்பது அரசனின் செல்வ வளத்தைக் காட்டும் பொருளாகவும், பரிசிலருக்குக் கிடைக்கும் கொடைப் பொருளாகவும் அமைகிறது.

செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பற்றிய பாடலில்,

“தென் கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை” (பதிற்றுப்பத்து 67:4)

என்று தென்கடல் முத்துகளுடன் நற்கலன்களைப் பெறுவதைப் புலவர் குறிப்பிடுகிறார்.

இதன் மூலம் சேர நாட்டின் கடல்வளம், முத்துவளம் மற்றும் அவை அரசனுடைய கொடைப் பண்புடன் கொண்டிருந்த தொடர்பு ஆகியவற்றை அறிய முடிகிறது.

பொன்னையும் நாட்டையும் வழங்குதல்

பதிற்றுப்பத்தில் கொடை என்பது சிறிய பொருட்களை வழங்குவதோடு முடிவதில்லை. சில சந்தர்ப்பங்களில் மன்னர்கள் புலவர்களுக்கு மிகப்பெரிய அளவில் செல்வத்தையும் நிலப்பகுதிகளையும் வழங்கியதாகப் பதிகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார் பெற்ற பரிசிலாக நாற்பது நூறாயிரம் பொன் வழங்கப்பட்டதாகப் பதிகச் செய்தி கூறுகிறது. மேலும் தான் ஆளும் நாட்டின் ஒரு பகுதியையும் வழங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது.இது,

பொருள் → பொன் → நிலம் → ஆட்சிப் பகுதி என்ற அளவிற்கு கொடை விரிவடைந்திருந்ததை வெளிப்படுத்துகிறது.

நாட்டையே கொடையாக வழங்கும் வள்ளன்மை

பெருஞ்சேரல் இரும்பொறையின் கொடைச்சிறப்பு இதைவிடப் பெரும் அளவில் காணப்படுகிறது. அரிசில்கிழார் பாடிய எட்டாம் பத்தின் பதிகச் செய்தியில்,

“கோயிலுள்ள எல்லாம் கொண்மின்”»

என்று கூறி, ஒன்பது நூறாயிரம் காணத்தோடு அரசுக் கட்டிலையும் வழங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும்,

“இரந்தோர் வாழ நல்கி, இரப்போர்க்கு

ஈதல் தண்டா மா சிதறு இருக்கை” (பதிற்றுப்பத்து 76:7–8)

என்று அவனது ஈகை நிறுத்தமற நிறைந்திருந்ததை எடுத்துரைக்கிறது.

இதனால் கொடை என்பது அரசனுடைய செல்வத்தைக் குறைப்பதாக அல்லாமல், அவனது புகழையும் சமூகப் பெருமையையும் நிலைநிறுத்தும் செயலாக கருதப்பட்டதை அறியலாம்.

பரிசிலரின் வாழ்வாதாரமாக மன்னன்

பதிற்றுப்பத்தில் மன்னன் பரிசிலர்களின் வாழ்வாதாரமாகவே சித்தரிக்கப்படுகிறான்.

“பரிசிலர் வெறுக்கை! பாணர் நாள் அவை!”» (பதிற்றுப்பத்து 38:9)

என்ற பாடலடி இதனைத் தெளிவுபடுத்துகிறது. அதேபோல்,

“பாணர் புரவல! பரிசிலர் வெறுக்கை!” (பதிற்றுப்பத்து 65:11)

என்றும் செல்வக்கடுங்கோ வாழியாதன் அழைக்கப்படுகிறான்.

இங்கு “புரவலன்”, “வெறுக்கை” ஆகிய சொற்கள் மன்னன் கலைஞர்களுக்கும் பரிசிலர்களுக்கும் ஆதரவளிக்கும் நிலையை வெளிப்படுத்துகின்றன.

மழைக்கு ஒப்பான கொடை

சங்க இலக்கியங்களில் கொடை மழையோடு ஒப்பிடப்படுவது குறிப்பிடத்தக்கது. மழை வேறுபாடின்றி நிலத்திற்குத் தண்ணீர் வழங்குவது போல, சிறந்த அரசனும் தன்னை நாடி வருவோருக்கு வேறுபாடின்றி வழங்க வேண்டும் என்ற கருத்து வெளிப்படுகிறது.

செல்வக்கடுங்கோ வாழியாதனின் கொடைச்சிறப்பை எடுத்துரைக்கும் பாடலில்:

“சேறு செய் மாரியின், அளிக்கும் நின்

சாறு படு திருவின் நனை மகிழானே.” (பதிற்றுப்பத்து 65:16–17)

என்று கூறப்படுகிறது. இங்கு மழை எவ்வாறு நிலத்தை வளப்படுத்துகிறதோ, அவ்வாறே மன்னனின் கொடை அவனை நாடுவோரின் வாழ்வை வளப்படுத்துகிறது என்ற கருத்து உருவாகிறது.

கொடை மற்றும் அறச்சிந்தனை

பதிற்றுப்பத்தில் கொடை என்பது வெறும் பொருளாதார நடவடிக்கையாக இல்லாமல், அறத்தோடு இணைந்ததாகக் காணப்படுகிறது. இரவலரைப் பசியிலிருந்து காப்பதும், வருவோருக்கு உணவு அளிப்பதும், பாணர்களை ஆதரிப்பதும், பெற்ற செல்வத்தைப் பகிர்வதும் அரசனுடைய அறக்கடமைகளாகக் கருதப்படுகின்றன. நெடுஞ்சேரலாதனைப் பற்றிய பாடலில்,

“வருநர்க்கு வரையாது பொலங்கலம் தெளிர்ப்ப” (பதிற்றுப்பத்து 18:3)

என்றும், நார்முடிச்சேரலைப் பற்றிய பாடலில்,

“பகுத்தூண் தொகுத்த ஆண்மை” (பதிற்றுப்பத்து 38:15)

என்றும் கூறப்படுவது இதனை உணர்த்துகின்றது. எனவே, கொடைச்சிறப்பு என்பது சங்ககால அரசனின் அறம், விருந்தோம்பல், சமூகப் பொறுப்பு, புகழ் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வெளிப்பாடாக அமைந்துள்ளது.

சேர மன்னர்களின் கொடைச் சிறப்பின் வகைப்பாடு

உணவு வழங்குதல்| பதிற்றுப்பத்து 18:1–3| வருநரைப் பேணுதல்

விருந்தோம்பல்| பதிற்றுப்பத்து 18:1–7| குறைவின்றி வழங்குதல்

பகுத்துண்ணுதல்| பதிற்றுப்பத்து 38:13–16| பிறருக்காக வாழ்தல்

யானை வழங்குதல்| பதிற்றுப்பத்து 47:1–2| போர்ப்பரிசில் வழங்குதல்

பாணர் பேணுதல்| பதிற்றுப்பத்து 38:9–10| கலைஞர்களுக்கு ஆதரவு

பொன்/அணிகலன்| பதிற்றுப்பத்து 67:1–4| செல்வத்தைப் பகிர்தல்

முத்து/நற்கலம்| பதிற்றுப்பத்து 67:4| கடல்வளத்தைப் பரிசாக வழங்குதல்

இரவலர் பேணுதல்| பதிற்றுப்பத்து 76:7–8| ஈதல் தண்டாமை

பெரும் செல்வப் பரிசு| எட்டாம் பத்து பதிகம்| ஒன்பது நூறாயிரம் காணம்

நிலம்/ஆட்சிப் பகுதி| நான்காம் பத்து பதிகம்| நாட்டுப் பகுதியையும் வழங்குதல்

இந்த வகைப்பாடு பதிற்றுப்பத்தில் கொடை என்பது ஒரே வடிவுடையதல்ல; உணவு, பொருள், அணிகலன், யானை, பொன், முத்து, நிலம், வருவாய், ஆட்சிப் பகுதி எனப் பல நிலைகளில் வெளிப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

கொடைச்சிறப்பும் சமூக உறவும்

பதிற்றுப்பத்தில் மன்னனுக்கும் புலவர்களுக்கும் இடையேயான உறவு வெறும் அரசியல் உறவாக அமையவில்லை. புலவர் மன்னனின் வீரத்தையும் கொடையையும் பாடுகிறார்; மன்னன் புலவரின் கலைத்திறனை மதித்து அவருக்கு வேண்டிய பரிசை வழங்குகிறான். இவ்விருதரப்பு உறவு சங்ககாலப் பண்பாட்டு அமைப்பில் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது.

“அட்டு ஆனானே குட்டுவன்; அடுதொறும்

பெற்று ஆனாரே பரிசிலர் களிறே”» (பதிற்றுப்பத்து 47:1–2)

என்பது மன்னனுக்கும் பரிசிலருக்கும் இடையேயான உறவைத் தெளிவுபடுத்துகிறது. அதேபோல் பாடல் 38-ல்,

“பரிசிலர் வெறுக்கை! பாணர் நாள் அவை!” (பதிற்றுப்பத்து 38:9)

என்பது கலைஞர்களை அரசவையில் நிலைபெறச் செய்த மன்னனின் பண்பை வெளிப்படுத்துகிறது.

கொடைச்சிறப்பும் மன்னனின் புகழும்

சங்க இலக்கியத்தில் மன்னனின் புகழ் அவனது போர்வெற்றியால் மட்டும் உருவாகவில்லை. அவனுடைய கொடையும் புகழுக்கான முக்கியக் காரணியாக அமைந்தது. கொடையால் புலவர்கள் வாழ்ந்தனர்; புலவர்கள் பாடிய பாடல்களால் மன்னனின் புகழ் தலைமுறைகளைக் கடந்தும் நிலைத்தது. நார்முடிச்சேரலைப் பற்றிய பாடலில்,

“உலகத்தோரே பலர்மன் செல்வர்;

எல்லாருள்ளும் நின் நல் இசை மிகுமே” (பதிற்றுப்பத்து 38:1–2)

என்று அவனது புகழ் பிற செல்வர்களைக் காட்டிலும் உயர்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இதனால் கொடை → புலவர் ஆதரவு → புகழ்பாடல் → மன்னனின் புகழ் நிலைபெறுதல் என்ற சமூக–பண்பாட்டு தொடர்ச்சியைப் பதிற்றுப்பத்தில் காண முடிகிறது.

முடிவுரை

பதிற்றுப்பத்தில் இடம்பெறும் கொடைச்சிறப்பு, பழந்தமிழரின் அரசியல் மற்றும் சமூக அறச்சிந்தனையை வெளிப்படுத்தும் முக்கியமான கூறாக அமைகிறது. சேர மன்னர்களின் கொடை என்பது வெறும் பொருளை வழங்குதல் என்ற குறுகிய பொருளைக் கொண்டதல்ல. அது விருந்தோம்பல், இரவலரைப் பேணுதல், பாணர் மற்றும் பரிசிலர்களுக்கு ஆதரவு, போரில் பெற்ற செல்வத்தைப் பகிர்தல், யானை வழங்குதல், பொன் மற்றும் முத்து வழங்குதல், நிலம் மற்றும் வருவாய் வழங்குதல், பகுத்துண்ணுதல் எனப் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது.

“வருநர்க்கு வரையாது” என்ற நெடுஞ்சேரலாதனின் விருந்தோம்பலும், “பரிசிலர் வெறுக்கை” என்ற நார்முடிச்சேரலின் வள்ளன்மையும், “அடுதொறும் பெற்றானாரே பரிசிலர் களிறே” என்ற செங்குட்டுவனின் யானைக் கொடையும், “பகுத்தூண் தொகுத்த ஆண்மை” என்ற பகிர்ந்துண்ணும் அறச்சிந்தனையும், “இரந்தோர் வாழ நல்கி / இரப்போர்க்கு ஈதல் தண்டா” என்ற பெருஞ்சேரல் இரும்பொறையின் ஈகையும் சேர மன்னர்களின் கொடைப்பண்பின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன.

மேலும், கொடை தனிமனித உதவியாக மட்டும் அமையாமல், புலவர்–மன்னர் உறவு, கலைஞர்களின் வாழ்வாதாரம், சமூகப் பகிர்வு, விருந்தோம்பல், அரசனின் புகழ் ஆகியவற்றை ஒருங்கிணைத்த சமூக அமைப்பாக இருந்துள்ளது. பதிற்றுப்பத்தில் மன்னனின் செல்வம் அவனுடைய தனிப்பட்ட அனுபவத்திற்குரியதாக மட்டும் இல்லாமல், அவனை நாடி வருவோருக்கும் பயன்பட வேண்டிய பொதுவளமாகக் கருதப்பட்டதைப் பாடல் சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. எனவே, “பதிற்றுப்பத்தில் கொடைச்சிறப்பு” என்பது சேர மன்னர்களின் வள்ளன்மையைப் பதிவு செய்யும் ஆய்வுப் பொருள் மட்டுமன்று; சங்ககாலத் தமிழரின் பகிர்வு, அறம், விருந்தோம்பல், கலைப் பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் முக்கியமான பண்பாட்டுக் கூறாகவும் விளங்குகிறது.

துணைநூற்பட்டியல்

References

[1]. ஆலிஸ், அ. (உ.ஆ.). பதிற்றுப்பத்து – மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை

[2]. நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் அ. (உ.ஆ.). பதிற்றுப்பத்து – மூலம் மற்றும் உரை. தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,சென்ன.

[3]. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை (உ.ஆ.). பதிற்றுப்பத்து – மூலமும் விளக்கவுரையும். சென்னை.

[4]. புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). பதிற்றுப்பத்து தெளிவுரை, பாரி நிலையம். சென்னை.